முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2023 யூலை

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

(Advanced Financial Accounting & Costing)

2023-08-19
காலை
[8.45 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத :03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 11
வினாக்கள் : 07

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த அதே **ஒரு மொழியிலேயே விடையளித்தல்** வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை **மாத்திரம்** அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச்சொல் செவ்வை நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **வினைச்சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் **வரைவிலக்கணத்தின்** அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.6** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** கணக்கீட்டின் அடிப்படை எண்ணக்கருக்கள் தொடர்பில் கீழ்வருவனவற்றில் சரியான கூற்று எது?

(1) நிதி நிலைக் கூற்று, முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் காசுப் பாய்வுக் கூற்று ஆகியன மாத்திரமே நிதிக் கூற்றுகளின் கூறுகள் (components) ஆகும்.

(2) பொறுப்பு ஆனது வணிகத்திற்கான ஒரு கடப்பாட்டை உருவாக்குகிறது.

(3) கடப்பாடு ஒன்றைத் தீர்க்கும்போது, அங்கு காசின் வெளிப்பாய்வு மாத்திரமே இருக்கும்.

(4) அனைத்து சொத்துகளும் பௌதிக இருப்பைக் கொண்டிருக்கும்.

(02 புள்ளிகள்)

**1.2** கீழ்வருவனவற்றில் கிரயக் கணக்கீடு தொடர்பான சரியான கூற்று எது?

(1) முதன்மைக் கிரயமானது நேர் பொருள் கிரயத்தையும் நேர் கூலிக் கிரயங்களையும் ஏனைய நேர் கிரயங்களையும் கொண்டிருக்கிறது.

(2) வரலாற்று ரீதியான கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் மாத்திரமே கிரயக் கணக்கீட்டில் பயன்படுத்தப்படுகிறது.

(3) கிரயமானது அதன் தன்மைக்கு ஏற்ப, நேர் கிரயங்கள் எனவும் நேரில் கிரயங்கள் எனவும் பிரிக்கப்படலாம்.

(4) ஏற்கனவே செலவு செய்யப்பட்ட ஒரு கிரயம் சந்தர்ப்பச் செலவு என அழைக்கப்படுகிறது.

(02 புள்ளிகள்)

**1.3** **நிசாந்த டிரேடர்ஸ்** 2023 மார்ச் 31 இல் 1,000 அலகுகள் தொக்குகளைக் கொண்டிருந்தது. அந்தத் திகதி வரை **நிசாந்த டிரேடர்ஸ்** இந்தத் தொக்குகளைத் தயாரிப்பதற்கு ரூபா 69,000/- கிரயத்தைச் செலவு செய்திருந்தது. தற்போதைய பொருளாதார நிலை காரணமாக, அலகொன்றுக்கு ரூபா 2/- என்ற விற்பனை தொடர்பான கிரயங்களைச் செலவு செய்து அலகொன்று ரூபா 80/- விலையில் இந்தத் தொக்குகளை விற்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2023 மார்ச் 31 இல் தொக்கின் நிகர தேறத்தக்க பெறுமதி (NRV):

(1) ரூபா 80,000/-. (2) ரூபா 78,000/-. (3) ரூபா 82,000/-. (4) ரூபா 40,000/-.

(02 புள்ளிகள்)

**1.4** அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர், ஆனால் நிதிக் கூற்றுகள் அதிகாரமளிக்கப்படுவதற்கு முன்னர் இடம்பெற்ற கீழ்வரும் நிகழ்வுகளைக் கருதுக. LKAS 10 – அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் என்ற நியமத்தின்படி, கீழ்வருவனவற்றில் எது சீராக்கல் நிகழ்வாக அமையும்?

(1) தொக்குகளின் ஒரு பகுதி நிதி நிலைக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட கிரயத்தைவிட குறைந்த விலையில் விற்பனை செய்யப்படல்.

(2) ஒரு செயற்பாட்டை தொடராமல் இருப்பதற்கான திட்டத்தை அறிவித்தல்.

(3) ஒரு பெரிய உற்பத்திப் பொறி தீயினால் அழிவடைதல்.

(4) சாதாரண பங்குதாரர்களுக்கு பங்கிலாபங்களை வெளிப்படுத்தல். (02 புள்ளிகள்)

**1.5** பங்குடமையுடன் தொடர்புடைய கீழ்வரும் கூற்றுகளைக் கருதுக:

**(a)** எழுத்துமூல உடன்படிக்கையொன்று இல்லாது பங்குடமை ஒன்றை உருவாக்க முடியாது.

**(b)** பங்குடமை வியாபாரமொன்றின் பங்காளர்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை 50 ஆக இருத்தல் வேண்டும்.

**(c)** பங்குடமையொன்று இலாப நோக்குடன் பொதுவான வணிகத்தை நடத்துகிறது.

**(d)** பங்குடமை ஒரு சட்ட ஆளுமையைக் கொண்டிருக்கிறது.

மேலுள்ளவற்றுள், பங்குடமை தொடர்பில் சரியான கூற்று/ கூற்றுகள்:

(1) **(a)** மாத்திரம். (2) **(c)** மாத்திரம்.

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம். (4) **(b)** யும் **(c)** யும் **(d)** யும் மாத்திரம்.

(02 புள்ளிகள்)

**1.6** **வரையறுக்கப்பட்ட ரங்கா (தனியார்) கம்பனி** பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி ஆகும். கீழ்வரும் தகவல்கள் 2023 மார்ச் மாதத்துடன் தொடர்புடையவை ஆகும்:

| | **ரூபா** |
|---|---|
| 2023 மார்ச் 01 இல் VAT கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவு (credit) மீதி | 125,000 |
| விற்பனைகள் (VAT உள்ளடக்கப்படாத) | 6,000,000 |
| விற்பனைத் திரும்பல்கள் (VAT உள்ளடக்கப்படாத) | 240,000 |
| கொள்வனவுகள் (VAT உள்ளடக்கப்படாத) | 4,800,000 |

*(அனைத்து கொள்வனவுகளும் விற்பனைகளும் வரி விலைப்பட்டியல்களால் ஆதரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமான VAT வீதம் 15% ஆகும்.)*

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2023 மார்ச் 31 இல் செலுத்த வேண்டிய VAT தொகை:

(1) ரூபா 341,000/-. (2) ரூபா 305,000/-. (3) ரூபா 19,000/-. (4) ரூபா 269,000/-.

(02 புள்ளிகள்)

**1.7** தொடக்கம் **1.10** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.7** கிரயக் கணக்கீட்டின் மூன்று (03) நோக்கங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.8** "ஒருங்கிணைந்த கணக்கீட்டு முறைமை" மற்றும் "ஒருங்கிணைக்கப்படாத கணக்கீட்டு முறைமை" ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

**1.9** கீழ்வரும் தகவல்கள் **பொருள் A** தொடர்பில் **சரண டிரேடர்ஸ்** இன் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| வருடாந்தக் கேள்வி | 30,000 அலகுகள் |
| சராசரி இருப்பு | 10,000 அலகுகள் |
| சிக்கனக் கட்டளைக் கணியம் (EOQ) | 5,000 அலகுகள் |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், **பொருள் A** இற்காக ஆண்டொன்றிற்குச் செய்யப்பட வேண்டிய கட்டளைகளின் உகந்த எண்ணிக்கையைக் (optimum number of orders) **கணிக்குக.**

(03 புள்ளிகள்)

**1.10** 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இற்கு இணங்க, கீழ்வரும் ஒவ்வொன்றிற்குமான ஏற்பாடுகளைக் குறிப்பிடுக:

(a) வணிகத்தின் முகாமை.

(b) வணிகத்திற்கு மூலதனத்தை உள்ளிடல்.

(c) புதிய பங்காளர் ஒருவரைச் சேர்த்தல்.

(d) பங்குடமைக்கு பங்காளர் ஒருவரால் வழங்கப்பட்ட கடன் மீதான வட்டி. (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

**ஆட்டிகல** என்பவருக்குச் சொந்தமான, அச்சிடல் பணிகளை மேற்கொள்ளும் கடையான **பைன் பிறின்ட்ஸ்** இன் கணக்கேடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

(1) **பைன் பிறின்ட்ஸ்** இன் வங்கி மீதி தவிர்ந்த சொத்துகளும் பரிப்புகளும் கீழ்வருமாறு:

*(ரூபா '000)*

| | **31.12.2022 இல்** | **01.01.2022 இல்** |
|---|---:|---:|
| அச்சிடும் இயந்திரம் - முன்கொணரற் பெறுமதியில் | 1,200 | 1,500 |
| தொக்கு – காகிதாதிகள் | 30 | 32 |
| வாடகை முற்கொடுப்பனவு | 20 | 10 |
| அட்டுறு மின்சாரம் | 7 | 5 |
| காகிதாதிகளை வழங்கிய வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டியவை | 18 | 15 |

(2) 2022 சனவரி 01 இலிருந்து 2022 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் **பைன் பிறின்ட்ஸ்** இன் வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்களினதும் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது:

| | **ரூபா '000** |
|---|---:|
| பெறுவனவுகள்: | |
| காசு வைப்புகள் | 1,825 |
| கொடுப்பனவுகள்: | |
| காகிதாதி வழங்குநர்கள் | 1,200 |
| மின்சாரம் | 65 |
| வாடகை | 130 |
| தொலைபேசிச் செலவினங்கள் | 24 |

கம்பனியானது 2022 டிசெம்பர் 31 இல் ரூபா 220,000/- வங்கி மேலதிகப் பற்றொன்றை பதிவு செய்திருந்தது.

(3) நாட்கூலி அடிப்படையில் இரண்டு ஊழியர்கள் கடையில் பணியாற்றுவதுடன் அவர்கள் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு ரூபா 1,500/- செலுத்தப்படுகிறது. சம்பளங்கள் செலுத்தப்பட்ட பின்னர், அச்சிடல் சேவைகள் ஊடாகச் சேகரிக்கப்பட்ட காசுகள் அனைத்தும் அந்த நாளின் இறுதியிலேயே வங்கியில் வைப்புச் செய்யப்படுகின்றன. கடையானது 2022 ஆம் ஆண்டில் 240 நாட்கள் இயங்கியது. சம்பளங்கள் தவிர்ந்த, ஏனைய அனைத்து கொடுப்பனவுகளும் வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(4) அனைத்து விற்பனைகளும் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் அனைத்து காகிதாதி கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) 2022 சனவரி 01 இல் **பைன் பிறின்ட்ஸ்** இன் மூலதன (உரிமையாண்மை) மீதியைக் **கணிக்குக.**

(03 புள்ளிகள்)

(b) **பைன் பிறின்ட்ஸ்** இன் 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகர இலாபத்தைக் **கணிக்குக.**

(07 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**புளு வேல் நீச்சல் கழகம்** ஆனது 2022 சனவரியில் உருவாக்கப்பட்ட திருகோணமலை இராவணா கல்லூரிக்குச் சொந்தமான ஒரு கழகம் ஆகும். இது நீச்சல் தடாகம் ஒன்றை இயக்குவதில் ஈடுபட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்பான கீழ்வரும் தகவல்கள் **புளு வேல் நீச்சல் கழகத்தின்** கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

**2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கொள்ளல், கொடுத்தல் கணக்கு** *(ரூபா)*

| | | | |
|---|---|---|---|
| அங்கத்துவச் சந்தா | 630,000 | மின்சாரம் | 96,000 |
| நீச்சல் வகுப்புகளிலிருந்தான வருமானம் | 325,000 | நீர் மற்றும் இரசாயனச் செலவினங்கள் | 180,000 |
| நீச்சல் போட்டிகளுக்கான அனுசரணை | 220,000 | துப்புரவுத் பணியாளர்களுக்கான சம்பளம் | 312,000 |
| நீச்சல் போட்டி நுழைவுக் கட்டணம் | 25,000 | நீச்சல் போட்டிக்கான செலவினங்கள் | 58,000 |
| விசேட நன்கொடைகள் | 250,000 | நீச்சல் பயிற்றுவிப்பாளர்களுக்கான கட்டணம் | 265,000 |
| | | வாடகை | 84,000 |
| | | நீச்சல் தடாக உபகரணம் | 360,000 |
| | | பிற செலவினங்கள் | 27,000 |
| | | 2022 டிசெம்பர் 31 இல் மீதி மு.கொ.வ. | 68,000 |
| | **1,450,000** | | **1,450,000** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ஆண்டொன்றிற்கு ரூபா 7,500/- ஆகும். 2022 ஆம் ஆண்டில் நீச்சல் கழக அங்கத்துவத்தை 78 அங்கத்தவர்கள் பெற்றுள்ளனர். 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அங்கத்துவச் சந்தா பெறுவனவுகள் பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்காக செலுத்தியவர்கள் | 74 அங்கத்தவர்கள் |
| 2023 ஆம் ஆண்டிற்காக செலுத்தியவர்கள் | 10 அங்கத்தவர்கள் |

(2) 2022 யூன் 01 இல் நீச்சல் கழகத்தினால் நீச்சல் தடாக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இவற்றை 3 ஆண்டுகளுக்குப் பயன்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(3) நடப்பு கணக்கீட்டு ஆண்டு தொடர்பில் விசேட நன்கொடைகள் கிடைக்கப்பெற்றன.

(4) 2022 டிசெம்பர் மாதத்திற்கான மின்சாரக் கட்டணம் ரூபா 9,000/- ஆனது 2023 சனவரியில் செலுத்தப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியது:**

2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக:**

(a) அங்கத்துவச் சந்தா கணக்கு. (02 புள்ளிகள்)

(b) வருமான, செலவினக் கணக்கு. (08 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**சானகவும் மாலகவும் C & M ஹாட்வெயார்** என்ற வன்பொருள் அங்காடியின் பங்காளர்கள் ஆவர். அவர்கள் இலாப / நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றனர். 2022 ஏப்ரல் 01 இல் **நுவான்** என்பவர் ரூபா 3,000,000/- இனை ஆரம்ப மூலதன முதலீடாக இட்டு, ஒரு புதிய பங்காளராக இதில் இணைந்து கொண்டார்.

(1) பங்குடமை உடன்படிக்கையானது கீழ்வருவனவற்றை வழங்குகிறது:

- மூலதனக் கணக்குகளின் ஆரம்ப மீதிக்கு 5% வட்டி உரித்துடையதாகும்.
- வணிக நிருவாகத்தில் காட்டும் ஈடுபாட்டிற்காக **சானக** மாதாந்தம் ரூபா 50,000/- சம்பளம் பெற உரித்துடையவர்.
- **சானக, மாலக** மற்றும் **நுவான்** ஆகியோருக்கிடையில் இலாப, நட்டங்கள் முறையே 2:3:1 என்ற விகிதத்தில் பகிரப்படுகின்றன.
- பங்குடமைக்கு பங்காளர்களால் வழங்கப்பட்ட கடன்கள் மீது 10% வருடாந்த வட்டி செலுத்தப்பட வேண்டும்.

(2) 2022 ஏப்ரல் 01 இல் பங்குடமையின் நன்மதிப்பு ரூபா 2,400,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நன்மதிப்புக் கணக்கொன்றைப் பேணாது, பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் ஊடாக நன்மதிப்பை சீராக்கம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(3) கீழ்வரும் மீதிகள் பங்குடமையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

*(ரூபா'000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| 2022 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்குகள் - **சானக** | | 3,200 |
| - **மாலக** | | 4,800 |
| 2022 ஏப்ரல் 01 இல் நடைமுறைக் கணக்குகள் - **சானக** | 1,200 | |
| - **மாலக** | | 2,300 |
| **நுவான்** உள்ளிட்ட மூலதனம் | | 3,000 |
| எடுப்பனவுகள் - **சானக** | 200 | |
| - **மாலக** | 150 | |
| 2022 ஏப்ரல் 01 இல் **மாலக** வழங்கிய கடன் | | 200 |

(4) **மாலக** வழங்கிய கடனுக்கான வட்டி தாக்கல் செய்யப்படுவதற்கு முன் பங்குடமையின் நிகர இலாபம் ரூபா 4,770,000/- ஆகும்.

(5) ஆண்டின் காலப்பகுதியில் **மாலக**வின் கடன் மீது எவ்வித மீள்கொடுப்பனவுகளும் செய்யப்பட வில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **C & M ஹாட்வெயாரின்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) பங்காளர்களின் மூலதனக் கணக்குகள். (04 புள்ளிகள்)

(b) பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள். (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(A) **வரையறுக்கப்பட்ட நுவான் (தனியார்) கம்பனி** ஒருங்கிணைக்கப்படாத கணக்கீட்டு முறைமையைப் பயன்படுத்துகிறது. 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கிரயக் கணக்குகளில் காட்டப்பட்ட இலாபம் ரூபா 450,000/- ஆக இருந்த அதே வேளை நிதிக் கணக்குகளின்படியான இலாபம் ரூபா 409,000/- ஆக இருந்தது.

வித்தியாசத்திற்கான காரணங்கள் கீழ்வருமாறு:

(1) இருப்பு மதிப்பீடு: *(ரூபா)*

| | **கிரயக் கணக்குகளின்படி** | **நிதிக் கணக்குகளின்படி** |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 47,500 | 52,500 |
| இறுதி இருப்பு | 122,500 | 143,500 |

(2) பணிப்பாளர் கட்டணம் ரூபா 50,000/- ஆனது நிதிக் கணக்குகளில் மாத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(3) கிரயக் கணக்குகளின்படி தேய்மானக் கட்டணம் ரூபா 245,000/- உம் நிதிக் கணக்குகளின்படி ரூபா 300,000/- உம் ஆகும்.

(4) நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 48,000/- ஆனது நிதிக் கணக்குகளில் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியது:**

நிதிக் கணக்குகளுக்கும் கிரயக் கணக்குகளுக்கும் இடையேயான இலாப இணக்கக் கூற்றினைத் **தயாரிக்குக.**

(05 புள்ளிகள்)

(B) கீழ்வரும் தகவல்கள் 2023 யூன் மாதத்திற்கான **பொருள் A** தொடர்பில் **வரையறுக்கப்பட்ட ராம் கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

| **திகதி** | **விபரம்** | **கணியம் (அலகுகளில்)** | **அலகு விலை (ரூபா)** |
|---|---|---|---|
| 01.06.2023 | ஆரம்ப மீதி | 220 | 670 |
| 10.06.2023 | கொள்வனவுகள் | 500 | 619.60 |
| 15.06.2023 | விநியோகம் | 600 | - |
| 20.06.2023 | கொள்வனவுகள் | 200 | 690 |

**நீங்கள் செய்ய வேண்டியது:**

நிறையேற்றப்பட்ட சராசரி கிரய (WAC) முறையைப் பயன்படுத்தி **பொருள் A** இற்கான இருப்புப் பேரேட்டைத் **தயாரிக்குக.**

(05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(A) **வரையறுக்கப்பட்ட ஷாம் (தனியார்) கம்பனியின் பொருள் Y** தொடர்பான கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன**:**

| | |
|---|---|
| வருடாந்தக் கேள்வி | 180,625 அலகுகள் |
| அலகொன்றின் கொள்வனவு விலை | ரூபா 12.50 |
| பயன்பாடு | 2,000 - 10,000 அலகுகள் |
| அலகொன்றின் வருடாந்த நிறுத்திவைத்தல் கிரயம் | அலகு விலையின் 20% |
| கட்டளையிடல் கிரயம் | கட்டளை ஒன்றுக்கு ரூபா 500/- |
| கட்டளைக் காலம் (Lead Time) | 2 - 4 மாதங்கள் |

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக:**

(a) சிக்கனக் கட்டளைக் கணியம் (EOQ). (03 புள்ளிகள்)

(b) மறு கட்டளை மட்டம். (01 புள்ளி)

(c) குறைந்தபட்ச இருப்பு மட்டம். (02 புள்ளிகள்)

(B) கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட X** கம்பனியின் **பணி இல. 9000** தொடர்பில் பிரித்தெடுக்கப் பட்டுள்ளன.:

| | |
|---|---|
| நேர் மூலப்பொருள்கள் | 250 கிலோகிராம் - கிலோகிராமொன்று ரூபா 250/- விலையில் |
| நேர் கூலி | 125 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 1,000/-. |
| உற்பத்தி மேந்தலைகள் - பிரிவு **A** | நேர் கூலிக் கிரயத்தில் 200% |
| - பிரிவு **B** | நேர் கூலிக் கிரயத்தில் 75% |

கம்பனியானது விற்பனை விலையில் 20% இலாபத்தைப் பேணுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது:**

**பணி இல 9000** தொடர்பில் அறவிடப்பட வேண்டிய விலையைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

2023 மார்ச் 31 இல் **வரையறுக்கப்பட்ட வின் வேல்ட் (தனியார்) கம்பனியின்** பரீட்சை மீதி கீழ்வருமாறு:

| | வரவு (ரூபா '000) | செலவு (ரூபா '000) |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (1,200,000 சாதாரண பங்குகள்) 2022 ஏப்ரல் 01 இல் | | 4,800 |
| கைக்கொள் இலாபம் - 2022 ஏப்ரல் 01 இல் | | 10,614 |
| **பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்:** | | |
| மோட்டார் வாகனங்கள் | 10,000 | |
| அலுவலக உபகரணம் | 5,550 | |
| **2022 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம்:** | | |
| மோட்டார் வாகனங்கள் | | 5,000 |
| அலுவலக உபகரணம் | | 2,220 |
| 25% வங்கிக் கடன் (2022 ஏப்ரல் 01 இல் பெறப்பட்டது) | | 4,650 |
| வங்கி மீதி | 3,511 | |
| வியாபார வருமதிகள் | 6,280 | |
| வியாபார சென்மதிகள் | | 1,559 |
| 2023 மார்ச் 31 இல் தொக்கு | 650 | |
| விற்பனைகள் | | 20,825 |
| விற்பனைக் கிரயம் | 6,047 | |
| அலுவலக வாடகை | 725 | |
| எரிபொருள் செலவினம் | 426 | |
| விளம்பரப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் செலவினங்கள் | 1,182 | |
| விற்பனைப் பணிசை (தரகு) செலவினங்கள் | 926 | |
| நீர் மற்றும் மின்சாரம் | 132 | |
| அலுவலகப் பராமரிப்புச் செலவினங்கள் | 372 | |
| சம்பளங்கள், கூலிகள், EPF மற்றும் ETF | 7,697 | |
| வங்கிக் கட்டணங்கள் | 18 | |
| ஆண்டிற்கு 22% நிலையான வைப்புகள் (2022 ஏப்ரல் 01 இல் முதலீடு செய்யப்பட்டது) | 10,000 | |
| பிற நிருவாகச் செலவினங்கள் | 296 | |
| 2022 ஏப்ரல் 01 இல் ஐயுறவுக் கடன் ஏற்பாடு | | 125 |
| செலுத்திய வருமான வரி | 55 | |
| செலுத்த வேண்டிய EPF மற்றும் ETF | | 74 |
| பிற வருமானம் | | 4,000 |
| | **53,867** | **53,867** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) கம்பனியானது தற்போதுள்ள அனைத்து சாதாரண பங்குதாரர்களுக்கும் ஆண்டின் காலப்பகுதியில் உரிமை வழங்கலை மேற்கொண்டதுடன் 2022 ஏப்ரல் 01 இல் வைத்திருந்த ஒவ்வொரு 20 பங்குகளுக்கும் ஒரு பங்கு என்ற அடிப்படையில் பங்கொன்று ரூபா 60/- விலையில் வழங்கப்பட்டது. அனைத்து பங்குதாரர்களும் உரிமைகளை எடுத்துக் கொண்டதுடன் அனைத்து பங்குதாரர் களிடமிருந்தும் ஆண்டின் காலப்பகுதியில் காசு சேகரிக்கப்பட்டது. பெறப்பட்ட காசு காசுக் கணக்கில் வரவுப் பதிவு (debited) செய்யப்பட்டதுடன் பிற வருமானங்கள் கணக்கிற்கு செலவுப் பதிவு (credited) செய்யப்பட்டது. இது தவிர வேறு எந்தப் பதிவுகளும் அது தொடர்பில் செய்யப்படவில்லை.

(2) 2023 மார்ச் 31 இல், செலுத்த வேண்டிய வாடகை ரூபா 50,500/- ஆக இருந்த அதே வேளை முன்செலுத்திய மின்சாரக் கட்டணம் ரூபா 13,500/- ஆகவும் இருந்தது.

(3) பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் நேர்கோட்டு முறையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 4 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 5 ஆண்டுகள் |

(4) வரிமதிப்பாண்டு 2022/23 இற்காக மதிப்பிடப்பட்ட வருமான வரிப் பரிப்பு ரூபா 207,000/- ஆகும். ஆண்டின் காலப்பகுதியில் கம்பனியானது ரூபா. 55,000/- இனை காலாண்டு வருமான வரி தவணைக் கட்டணங்களாகச் செலுத்தியிருந்தது.

(5) பணிப்பாளர் சபையானது கைக்கொள் இலாபத்திலிருந்து பொது ஒதுக்கக் கணக்கிற்கு ரூபா 7,500,000/- இனை மாற்றுவதற்கு 2023 மார்ச் 25 இல் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் அனுமதி அளித்திருந்தது.

(6) கம்பனியின் முகாமையானது 2023 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் மீதியில் 10% இல் ஐயுறவுக் கடன் ஏற்பாட்டைப் பேணுவதற்குத் தீர்மானித்திருந்தது.

(7) நிலையான வைப்புகள் மீது பெறப்பட வேண்டிய வட்டி மற்றும் வங்கிக் கடன்கள் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி என்பன கணக்கேடுகளில் கணக்கிற் கொள்ளப்படவில்லை. ஆண்டின் காலப் பகுதியில் கடன்களுக்கான எவ்வித மீள்கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(8) நிதிக் கூற்றுகள் விநியோகிக்கப்படுவதற்காக 2023 யூன் 10 ஆந் திகதி பணிப்பாளர் சபையால் அதிகாரமளிக்கப்பட்டன.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

முகாமையின் பாவனைக்காக **வரையறுக்கப்பட்ட வின் வேல்ட் (தனியார்) கம்பனியின்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (13 புள்ளிகள்)

(b) 2023 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |